**தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொல்பொருளியல் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொல்பொருளியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) தொல்பொருளியல் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதி நிலமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 110,848,832 தொகையான மீதி 2018 ஆம் ஆண்டிற்கான நிதியல்லாத சொத்துக்களின் அசைவுக கூற்றில் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது ரூபா 1,080,865,199 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய ஆரம்ப மீதியானது ரூபா 970,016,367 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டமைக்கான காரணமாக அமைந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப மீதியை கூடுதலாக காண்பிப்பதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பிற்கான இணக்கப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள ஆதனத்தின் உரித்தினை பெற்றுக்கொள்ளாது, காணியானது ரூபா 911,500,000 மற்றும் கட்டிடங்கள் ரூபா 136,000,000 படியுமாக ரூபா 1,047,500,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆதனங்களின் உரித்தினை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |
| (இ) | ரூபா 34,898 கிரயமான மூலதன சொத்துக்கள் நிதியல்லாத சொத்துக்களின் அசைவுக் கூற்றில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை கைப்பற்றுவதற்காக செலவிடப்பட்ட மூலதன செலவினத்தை சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |
| (ஈ) | ஏனைய மூலதன செலவினங்களின் கீழ் மத்திய கலாச்சார நிதியம், அரச திணைக்களங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், தனிப்பட்ட தரப்பினர் போன்ற வழிகளில கிடைத்த பணத்தில் ஆய்வுகள், அகழ்வுகள், பாதுகாப்பு செயற்திட்ட பணிகளுக்காக மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 83,773,014 தொகையானது நிதியல்லாத சொத்துக்களின் அசைவுக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்திற்குரிய நிதியல்லாத சொத்துக்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |
| (உ) | திணைக்களத்தினால் தேடுதல்கள், அகழ்வுகள், பாதுகாப்பு ஆகியவற்றில் இனங்காணப்பட்ட மற்றும் உறுதி செய்யப்பட்ட தொலிபொருளியல் இடங்கள் மற்றும் பொருட்கள் போன்ற சொத்துக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கிரயம் பெயரளவு பெறுமதிகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட மற்றும் உறுதி செய்யப்பட்ட தொலிபொருளியல் இடங்கள் மற்றும் பொருட்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் பெயரளவு பெறுமதிகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. | - மேற்படி - |

**1.6.2 அரரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தப்பட்ட பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 93,628,741 ஆக இருந்ததுடன், கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியானது ரூபா 94,380,933 ஆகும். ரூபா 752,192 தொகையான வேறுபாடு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இணக்கம் செய்யப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தப்பட்ட பொழிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியினை இணக்கம் செய்யப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். |
| (ஆ) | மரணமடைதல், ஓய்வுபெறல், பணிநீக்கத்திறகுட்படல், சேவையை விட்டுச்செல்லல், சேவையிலிருந்து விடுவிக்கப்படல் போன்றவற்றின் காரணமாக திணைக்களத்தில் தற்போது சேவையாற்றாத ஊழியர்களிடமிருந்து மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,551,937 தொகையான கடன் மீதியில் 05 வருடங்களுக்க மேற்பட்ட காலம் கடந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,290,560 ஆகும். | உரிய நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு நிலுவைக் கடன் மீதியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |

**1.6.3 வைப்புகள்**

----------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி.571(3) ஏற்பாட்டின் பிரகாரம் பின்வரும் வைப்பு மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (அ) தொல்பொருளியல் இடங்களின் தேடுதல்கள், அகழ்வுகள், பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் செயற்திட்டங்களுக்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியினுள் மத்திய கலாச்சார நிதியத்திலிருந்து கிடைத்த பணத்திலிருந்து பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் 82 செயற்திட்டங்களின் எஞ்சிய பணமான ரூபா 19,479,807 தொகை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விடுவிப்பதற்கு அல்லது தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்காது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பண மீதியை விடுவிப்பதற்கோ அல்லது தீர்ப்பவு செய்வதற்கோ துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்பிற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. |
| (ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 50 செயற்திட்டங்களின் பணிகளுக்காக கிடைத்த பணத்தில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சேமிப்பு ரூபா 62,548,483 தொகை தீர்க்கப்பட்டிராததுடன், பணிகள் | பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்குரிய எஞ்சிய பணம் மற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களுக்குரிய பணம் ஆகியவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | இடைநிறுத்தப்பட்ட அல்லது பணிகள் ஆரம்பிக்கப்படாத 16 செயற்திட்டங்களுக்குரியதாக கிடைத்த ரூபா 13,677,475 ஆன மீதி தீர்க்கப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | தொல்பொருளியல் இடங்களின் தேடுதல்கள், அகழ்வுகள், பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் செயற்திட்டங்கள் 25 இற்காக அரச திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து மானியங்களாக 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியினுள் கிடைத்த நிதியங்களிலிருந்து செயற்திட்ட பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு எஞ்சிய பணமான ரூபா 21,719,249 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களின் எஞ்சிய நிதியங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஈ) | தொல்பொருளியல் இடங்களின் 12 நிர்மாண மற்றும் பராமரிப்பு ஒப்பந்தங்களின் கொடுப்பனவுகளிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூபா 1,407,424 தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது 01 முதல் 04 வருடங்கள் வரையான காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பிடிகாசினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) காசுப் புத்தகம்** | | |
| நிதிப்பிரமாணம் 446 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய மக்கள் வங்கியின் யாழ்ப்பாண கிளையின் நடைமுறைக் கணக்கிற்கு உரிய காசுப் புத்ததகம் பேணப்பட்டிராததுடன், மொணராகல கிளையின் நடைமுறை கணக்குகளுக்குரிய காசுப் புத்தகம் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 446 இன் ஏற்பாடுகளுக்கமைய காசுப் புத்தகம் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. |
| **(ஆ) திணைக்கள அங்கீகரிக்கப்பட்ட செலவின பேரேடு** | | |
| நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்கள அங்கீகரிக்கப்பட்ட செலவின பேரேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 447 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் பொது 138 படிவத்தின் பிரகாரம் எஞ்சியுளள ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுப்பட்டுள்ள பொறுப்புகளையும் காண்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட செலவின பேரேடு பேணப்பட வேண்டும். | - மேற்படி - |
| **(இ) கிடைக்கப்பெற்ற காசோலைகள், காசுக்கட்டளைகள் ஆகியவற்றுக்கான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகள், காசுக்கட்டளைகள் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 451 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், ஜீ.ஏ.எம் 83 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்ட வேண்டும். | - மேற்படி - |
| **(ஈ) பிணைகள் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | |
| **(உ) நட்டங்கள் தொடர்பான பதிவேடு**<br>--------------------------------------------- | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளுக்கமைய அதன் கீழான மாதிரிக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | - மேற்படி - |
| **(ஊ) கடன் மற்றும் முற்பணப் பதிவேடு**<br>----------------------------------------------- | | |
| 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய கடன் மற்றும் முற்பணங்கள் பதிவேடொன்று உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சீ.சீ. 10 படிவத்தினை அடிப்படையாக கொண்டு கடன் மற்றும் முற்பணப் பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டும். | - மேற்படி - |

### 1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரிக்கப்பட்டு பேணிச் செலல்லப்புடுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பில் முன்னர் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்புகளுக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு மீளாய்வினை மேற்கொண்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு பணிகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறையொன்று உள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளின் பிரகாரம் அந்த தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |

### 1.6.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | | |
| --- | --- | --- | --- | --- |
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| **(அ)** | **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | | |
| (i) | 1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருளியல் சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் 6,7,8,9 ஆம் பிரிவுகள். | ஏற்பாடுகளின் விதிகளுக்கு முரணாக அகழ்வாராய்ச்சி செய்வதற்கான உரிமங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகிளன் பிரகாரம் உரிய முறையில் உரிமஙடகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. |
| (ii) | 1951 இன் 28 ஆம் இலக்க அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு | அச்சிடப்படும் எல்லா புத்தகங்களினதும், நூலினதும் 04 பிரதிகள் பாதுகாப்பிற்காக தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அச்சிடப்பட்டிருந்த 02 நூல்களின் பிரதிகள் பேணுகைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | | | |
| (i) | XIV அத்தியாயத்தின் 2, 3 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | ஏற்பாடுகளின் விதிகளுக்கு முரணாக முறையற்ற விதத்தில் கூட்டிணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைந்த படிகளை செலுத்துதல் முறைமைப்படுத்தப்பட வேண்டியமை. | - மேற்படி - |
| (ii) | XXXIII | சட்டமா அதிபரிடம் | வெளி | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| அத்தியாயத்தின் 1.1 மற்றும் 1.4 ஆம் பிரிவு | ஆலோசனை பெற்றுக்கொள்ளாது தேடுதல் மற்றும் அகழ்வு செயற்திட்டங்களுக்காக வெளித்தரப்பினருடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. | நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடும் போது சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2011 பெப்ரவரி 02 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் தொலிபொருளியல் இடங்கள், தேடுதல்கள், அகழ்வுகள், பராமரிப்பு, பேணுகை மற்றும் முகாமைத்துவத்திற்காக மத்திய கலாச்சார நிதியம் ஈட்டும் வருமானத்தில் 25 சமவீதத்தினை வருடாந்தம் உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள போதிலும், அந்த பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) கிடைத்திருந்த நிதியங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்காக போதியளவிலான செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு முறையான ஒழுங்கின் அடிப்படையில் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2016 ஆம் ஆண்டின் போதுரூபா 115 மில்லியன், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 233 மில்லியன் மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 364 மில்லியன் எனுமாறு செயற்திட்டங்களுக்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | மத்திய கலாச்சார நிதியத்திடமிருந்து கிடைக்க வேண்டிய நிதிகளை உரிய முறையில் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2017 ஆம் ஆண்டின் போது நிதியேற்பாடு ஒழுங்கமைக்கப்பட்டிருந்த தொல்பொருளியல் இடங்களின் ஆராய்ச்சிகள், அகழ்வுகள், பேணுகை, பராமரிப்பு, மேம்படுத்தல் செயற்திட்டங்கள் 184 இல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 110 மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டப் பணிகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |
| (iii) | 2018 ஆம் ஆண்டி போது 191 செயற்திட்டங்களுக்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 11 செயற்திட்டங்கள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 364 மில்லியனான நிதியேற்பாட்டில் ரூபா 25 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், பௌதீக செயலாற்றல் 26 சதவீதம் மற்றும் நிதி செயலாற்றல் 7 சதவீதமுமான குறைவான மட்டத்தில் நிலவியது. | செயற்திட்டப் பணிகள் மற்றும் நிதிப் பயன்பாடு செயற்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |
| (ஆ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளியல் விவகார அமைச்சு, இலங்கை சுற்றுலா சபை மற்றும் இலங்கை காப்புறுதிக் கம்பனி ரூபா 36.4 மில்லியன் நிதியேற்பாட்டின் அடிப்படையில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதன் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் முறையே 20 சதவீதம் மற்றும் 22 சதவீதமுமான நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | செயற்திட்டப் பணிகள் மற்றும் நிதிப் பயன்பாடு செயற்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |

## 2.2 வங்கிக் கணக்குகளை கையாளுதல்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வட மத்திய மற்றும் மத்திய பிரதச அலுவலகங்களின் கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இரண்டு நடைமுறைக் கணக்குகளின் பறிமாற்றங்களை நடைமுறைப்படுத்தாது, அந்த பணிகள் தலைமை அலுவலகத்தின் பிரதம கணக்காளரால் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதற்கான காரணமாக அமைந்தது பிரதேச அலுவலகங்களில் கணக்காளர் ஒருவர் இல்லாதிருந்ததே என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | பிரதேச அலுவலக மட்டத்தில் கொடுப்பனவுகளை மெற்கொள்வதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்றினை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கண்காய்வு அவதானிப்புகளுக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. |
| (ஆ) | மக்கள் வங்கியின் மொணராகல மற்றும் யாழ்ப்பாணம் கிளையில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு நடைமுறைக் கணக்குகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன், 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளை மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயலற்ற வங்கி நடைமுறை கணக்குகளை மூடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | - மேற்படி - |
| (இ) | மக்கள் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் நடைமுறைக் கணக்கிற்காக காசுப் புத்தகமொன்று பேணப்பட்டிராததுடன், முறையற்ற விதத்தில காசு | உரிய முறையில் காசுப் புத்தகம் தயாரிக்கப்பட்டு, காசுப் புத்தகத்தின் மீதி வங்கிக் கூற்றின் மீதியுடன் இணக்கம் செய்து, தீர்க்கப்படடாத மீதியை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மீதி கணிப்பிடப்பட்டிருந்தது. கணிப்பீட்டின் பிரகாரம் காசுப் புத்தகத்தின் மீதி 2016 திசெம்பர் முதல் 2018 யூன் வரையிலும் ரூபா 1,147,611 ஆன மேலதிகப்பற்றாக காணப்பட்டதுடன், வங்கிக் கூற்றிலான ரூபா 6,155 ஆன மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், வங்கி இணக்கக்கூற்று 2018 யூன் மாதம் வரையிலும் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அந்த வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் கணக்கிற்கு செலவு வைக்கப்படாத தொகை ரூபா 14,814 மற்றும் இனங்கானப்படாத கொடுப்பனவுகளான ரூபா 235,731 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. கொடுப்பனவுகளுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படடாத காலவதியான பெறுமதி ரூபா 1,374,988 ஆன 18 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | |
| (ஈ) | மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையின் நடைமுறைக் கணக்கில் 15 சந்தர்ப்பங்களில் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட வைப்புத் தொகையான ரூபா 248,298 தொகை 01 முதல் 05 மாத காலத்தினை கடந்திருந்த போதிலும், இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 396(ஈ) ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (உ) | கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத 07 முதல் 27 மாதங்கள் வரையான காலாவதியான ரூபா 223,437 பெறுமதியான 59 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1940 இன் 09 ஆம் இலக்க கட்டளைகள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் அகழ்வாராய்ச்சி உரிமங்களை வெளியிடுவதற்கான ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படடிராததுடன், கட்டளைகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்ட 121 அனுமதிப்பத்திரங்களுக்காக ரூபா 363,000 தொகையான அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கு முரணாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் மூலம் கண்டறியப்பட்ட தொல்லியல் சொத்துக்கள் தொடர்பில் இனங்காணுவதற்கும் அவற்றை திணைக்களத்திற்கு கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகள் திட்டமிடப்பட்டு உரிய முறையில் அகழ்வாராய்ச்சிக்கான அனுமதிப்பத்திரங்களை வெளியிடுவதற்கும் அவற்றை திணைக்களத்திற்கு கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். |

### 3.2 சொத்துக்களின் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகம், 12 பிரதேச அலுவலகங்கள், 08 சுற்றுலா விடுதிகள், தொல்பொருளியல் நூதனசாலை போன்ற காணி மற்றும் சொத்துக்களின் சட்டரீதியான உரித்தினை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களின் சட்டரீதியான உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். |
| (ஆ) | திணைக்களத்தின் 03 பிரதேச செயலகங்களின் மீளாய்வாண்டிற்குரிய சொத்துக்களின் மீளாய்வு பணிகள் 2018 மே 25 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்னைய ஆண்டுகளின் சொத்துக்கள் மீளாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள், மிகைகள் மற்றும் சொத்துக்களின் கைத்தவிர்ப்பு தொடர்பிலான சீராக்கங்கள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் சொத்துக்களின் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்படும் பற்றாக்குறைகள், மிகைகள் மற்றும் கைத்தவிர்ப்புகள் தொடர்பில் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | - மேற்படி - |

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில் வழங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது முன்வைக்கப்பட்ட 02 கண்காய்வு ஐயவினாக்களுக்கு மற்றும் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட வெளியிடப்பட்ட 04 கண்காய்வு ஐயவினாக்களுக்கு 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 452(i) ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பில் பதில்கள் தொடர்பில் துரிதமாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| ''நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் ஏனைய அரச நிறுவனங்களுடன் தொடர்புற்று நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான சரியான தரவுக் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதல் தொடர்பில் மதிப்பாய்வுகளுக்காக தரவுக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி. 133 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு பணிகளுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், நியமனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது 2018 ஒக்தோபர் மாதத்திலாகும், | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகளில் பணிகளை பலப்படுத்துவதற்காக உள்ளக கணக்காய்வு பணிகள் செயற்திறனாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| இதன் காரணமாக உள்ளக கணக்காய்வு பணிகள் போதியளவில் மற்றும் செயற்திறனாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ குழு 2018 ஒக்தோபர் மாதத்தில் தாபிக்கப்பட்டு 02 கூட்டத்தடவைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், நோக்கங்களை அடைந்துகொள்ளும் போது வளங்கள் செயற்திறனாகவும் சிக்கனமானவும் பயன்படுத்தப்பட்டுளமையை உறுதிப்படுத்துவதற்கான மீளாய்வினை போதியளவில் மேற்கொள்ள முடியாதிருந்தது. | வளங்கள் செயற்திறனாகவும் சிக்கனமானவும் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்புது தொடர்பிலான மீளாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

### 6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் வெற்றிடங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் செயற்திறனுக்கு தாக்கம் செலுத்தும் சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்கள் அல்லது பணிப்பாளர் அல்லது உதவிப் பணிப்பாளர் பதவிகள் 40 வெற்றிடம் ஏற்பட்டு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களுக்காக துரிதமாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. |
| (ஆ) திணைக்களத்தின் பதவியுயர்த்தல் | பதவியுயர்த்தல் | - மேற்படி - |

| | |
|---|---|
| நடைமுறை இது வரையிலும் அங்கீகரித்துக் கொள்வதிலான தாமதத்தின் காரணமாக மூன்றாம் நிலையிலான சேவை மட்டத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் 26 வெற்றிடங்கள் 05 வருட காலமாக நிலவியது. | நடைமுறையை துரிதமாக அங்கீகரித்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |